

சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட "என் உயிரினும் மேலான' பேச்சுப் போட்டியில், வெற்றி பெற்ற பேச்சாளர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்ச்சியில், கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் நினைவு பரிசு வழங்கினார்கள். உடன், கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி ஆர்.பாலு, கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின்,துணை பொதுச் செயலாளர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, வனத் துறை அமைச்சர் முனைவர் பொன்முடி, நாடாளுமன்ற கழகக்குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிருவாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில், முத்தமிழறிஞர், கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட "என் உயிரினும் மேலான பேச்சுப் போட்டியில், வெற்றி பெற்ற பேச்சாளர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்ச்சியில், முத்தமிழறிஞர் பதிப்பகம் சார்பில், 9 நூல்களை கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.கஸ்டாலின் அவர்கள் வெளியிட கழகப் பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் பெற்றுக்கொண்டார். உடன், கழக பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, கழக இளைஞர் அணி செயலாளரும்,துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின்,துணை பொதுச் செயலாளர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, வனத் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி.நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி,அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள். மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள், தலைமைக் கழக நிருவாகிகள் மற்றும் நூலாசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நவீன யுகத்தின் புதிய பேச்சுப் போராளிகளே வருக! வருக!!

**முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை...**

முதல் பக்கத் தொடர்ச்சி

வாகை சூடியுள்ள மோகநிதி, சிவரஞ்சனி, வியானி விஷ்வா ஆகியோருக்கு என்னுடைய பாராட்டுகள்! வாழ்த்துகள்! இவர்களுக்கு முறையே, 1 லட்சம் - 75 ஆயிரம் - 50 ஆயிரம் என்று பரிசுத்தொகையை அறிவித்திருக்கிறீர்கள். கழகத் தலைவராக இளைஞர் அணிக்கு ஒரு வேண்டுகோள்... சொற்களை வென்ற இந்தச் செல்வங்களுக்கான பரிசுத்தொகையை நீங்கள் இன்னும் உயர்த்தி வழங்க வேண்டும்! வழங்குவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. வழங்க வேண்டும் என்று உத்தரவிடுகிறேன். 17 ஆயிரம் படிகளைக் கடந்து முதல் மூன்று இடங்களை அவர்கள் வென்றிருக்கிறார்கள்! இது மகத்தான சாதனை! போட்டியில் பங்கேற்றிருக்கும் 17 ஆயிரம் பேரும் பாராட்டுக்கு உரியவர்கள்தான்!

### 182 பேச்சாளர்களையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்!

வெற்றி பரிசு தாண்டி, பங்கேற்பதுதான் மிக முக்கியமானது. இறுதிப் போட்டியில் பங்கெடுத்த 182 பேச்சாளர்கள் இந்த அரங்கத்தில் இருக்கிறார்கள். அறிவாலயத்தின் முகப்பில் இருக்கும் நம்முடைய பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய திருவுருவச் சிலைக்கு முன்னால் நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டோம். அந்த 182 பேரோடு சேர்ந்து, நானும், நம்முடைய பொதுச் செயலாளர், பொருளாளர், துணைப் பொதுச் செயலாளர்கள் எல்லாம் உட்கார்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டோம். அப்பொழுது உங்கள் ஆர்வத்தைப் பார்த்து நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அப்போதே தம்பி உதயநிதியிடம் இந்தக் கோரிக்கையை நான் வைத்தே ஆக வேண்டும் என்று முடிவு செய்துவிட்டுதான் இந்த மேடைக்கே வந்தேன். மாவட்டச் செயலாளர்கள், அமைச்சர் பெருமக்கள் இங்கு வந்திருக்கிறீர்கள். உங்களிடம் நான் கழகத்தின் தலைவர் என்கிற முறையில் உரிமையோடு சொல்லிக் கொள்ள விரும்புவது உதயநிதி கூட இந்த வேண்டுகோளை எடுத்து வைத்தார் இனி உங்கள் மாவட்டங்களில் நடைபெறும் அனைத்துப் பொதுக்கூட்டங்களிலும், கழக நிகழ்ச்சிகளிலும் இங்குள்ள 182 பேச்சாளர்களை நீங்கள் பயன்படுத்தி ஆக வேண்டும். ஏன் என்றால், இங்கிருப்பவர்கள் பேச்சாளர்கள் மட்டும் அல்ல, இவர்கள்தான் திராவிட இயக்கத்தின் எதிர்காலத் தலைமுறை.

உங்களைப் போன்றுதான், நமக்கு ஒரு வாய்ப்பு கிடைக்காதா? இப்படி ஒரு மேடை கிடைக்காதா? என்று நாங்கள் எல்லாம் காத்திருந்த காலம் உண்டு! நானும் உங்களை மாதிரி மேடைகளில் பேசி வளர்ந்தவன்தான் இன்று உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

### எத்தகைய தியாகத்திற்கும் தயார் என அன்றே பேசினேன்!

1971ஆம் ஆண்டு, எனக்கு 18 வயது. கோவை மாணவர் மாநாட்டில் கல்லூரி மாணவனாகக் கலந்து கொண்டேன். ஏராளமான பேச்சாளர்கள்! அண்ணன் துரைமுருகன் மாதிரியான ஜாம்பவான்கள் எல்லாம் அங்கு உட்கார்ந்திருந்தார்கள். மாநாட்டுக்குத் தலைமை வகித்த அண்ணன் எல்.ஜி. அவர்களிடம் இரண்டு நிமிடம் வாய்ப்பு கொடுங்கள் என்று



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.10.2024) சென்னை, அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில்,முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட "என் உயிரினும் மேலான பேச்சுப் போட்டியில், முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற பேச்சாளர்களுக்கு பரிசுகள் வழங்கி,பாராட்டினார்.இந்நிகழ்ச்சியில், கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும்,நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு,கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின்,துணை பொதுச் செயலாளர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி,வனத் துறை அமைச்சர் முனைவர் பொன்முடி,நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள், தலைமைக் கழக நிருவாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கேட்டேன். இரண்டு நிமிடம் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தது, மேடையேறினேன்.

> **அ**ன்றைக்கு பேசியதை, என் நெஞ்சில் பசுமரத்தாணி போல் பதிந்து வைத்து நினைத்துக் கொண்டே இருக்கிறேன்... "இந்தி மொழித் திணிப்புக்கு எதிரான மாணவர் பட்டாளத்தில் என்னையும் சேர்த்துக் கொள்ளும் அந்த வாய்ப்பை நீங்கள் எனக்கு உருவாக்கித் தர வேண்டும். மொழிக்காக உயிரை இழக்கின்ற தியாகத்தைச் செய்வதற்குக்கூட நாங்கள் காத்திருக்கிறோம்" என்று சொல்லி, "என்னுடைய தந்தைக்கு நான்கு ஆண் பிள்ளைகள் இருக்கிறார்கள். எனவே, நான்கு ஆண் பிள்ளைகளில் ஒரு ஆண் பிள்ளை போய்விடுவதால் என்னுடைய தந்தை நிச்சயம் கவலைப்பட மாட்டார். அத்தகைய பாராட்டும் பெருமையும் வாங்கித் தந்த மகிழ்ச்சியும் என்னைச் சேரும். எத்தகைய தியாகத்தையும் செய்வதற்கு நான் தயார்" என்று முழங்கினேன்.

அன்றைக்கு பேசியதை, என் நெஞ்சில் பசுமரத்தாணி போல் பதிந்து வைத்து நினைத்துக் கொண்டே இருக்கிறேன்... "இந்தி மொழித் திணிப்புக்கு எதிரான மாணவர் பட்டாளத்தில் என்னையும் சேர்த்துக் கொள்ளும் அந்த வாய்ப்பை நீங்கள் எனக்கு உருவாக்கித் தர வேண்டும். மொழிக்காக உயிரை இழக்கின்ற தியாகத்தைச் செய்வதற்குக்கூட நாங்கள் காத்திருக்கிறோம்" என்று சொல்லி, "என்னுடைய தந்தைக்கு நான்கு ஆண் பிள்ளைகள் இருக்கிறார்கள். எனவே, நான்கு ஆண் பிள்ளைகளில் ஒரு ஆண் பிள்ளை போய்விடுவதால் என்னுடைய தந்தை நிச்சயம் கவலைப்பட மாட்டார். அத்தகைய பாராட்டும் - பெருமையும் வாங்கித் தந்த மகிழ்ச்சியும் என்னைச் சேரும். எத்தகைய தியாகத்தையும் செய்வதற்கு நான் தயார்" என்று முழங்கினேன்.

### முதலில் வீட்டைக் காப்பாற்றுங்கள் பின்னர் நாட்டை காப்பாற்றுங்கள்!

மறக்க முடியாத நினைவுகள்... காரணம், என்னுடைய பேச்சு மட்டுமல்ல; அதற்கு தலைவர் கலைஞர் மேடையில் சொன்ன மறுமொழி! தலைவர் கலைஞர் ஏன் கொண்டாடப்படுகிறார் என்பதற்கான விடைதான் அந்தப் பேச்சு.

தலைவர் கலைஞர் என்ன சொன்னார் என்றால், "நாங்கள் நான்கு பிள்ளைகள் இருக்கிறோம் என்று ஸ்டாலின் சொன்னான். ஸ்டாலினையும் சேர்த்து நான் என் நான்கு பிள்ளைகளையும் தரத் தயாராக இருக்கிறேன். எந்தத் தியாகத்திற்கும் நான் தயாராக இருக்கிறேன். நான் உழைத்து, உழைத்து - எழுதி, எழுதிச் சம்பாதித்த குடும்பத்தைச் சேர்ந்தவன். இந்தக் குடும்பத்தில் ஒரு ஸ்டாலின் அல்ல - நான்கு பிள்ளைகளும் நாட்டுக்காக சென்றாலும் பரவாயில்லை. ஆனால், ஏழை - எளிய வீட்டுப் பிள்ளைகள் இருக்கிறீர்கள். உங்களை நம்பி உங்களது பெற்றோர்கள் படிக்க அனுப்பி இருக்கிறார்கள். முதலில் வீட்டைக் காப்பாற்றுங்கள், பின்னர் நாட்டைக் காப்பாற்றுங்கள்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்.

உணர்ச்சிப் பிழம்பாக இருந்த மாணவர்களை தூண்டிவிடுவது போன்று அவர் பேசவில்லை! மாறாக அங்கு இருந்த அனைவருக்கும் வழிகாட்டினார்! அதனால்தான், அவர் தாயைவிடவும் மேலானவர்! அதனால்தான் அவர் தலைவர்!

உங்கள் பேச்சுகளைக் கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியில் பார்த்துப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைந்தேன். சிலரின் பேச்சுகள் - குரல்வளம் - உச்சரிப்பு - இதெல்லாம் அருமையாக இருந்தது! உங்களின் சிந்தனைகள் வியப்பில் ஆழ்த்தியது! பெரிய பெரிய பேச்சாளர்கள் பேசத் தயங்கும் கருத்துகளைக்கூட நீங்கள் துணிச்சலாகப் பேசினீர்கள்! குறிப்பாக, தமிழன்னையின் பாசத்தை பெற்றவர் கலைஞர் என்று பேசிய புதுக்கோட்டையைச் சேர்ந்த சிவ ஸ்ரீலட்சுமி - நம்முடைய அரசின் அனைத்துத் திட்டங்களையும் சொல்லி, ஒரு குடும்பத்தில் இருக்கும் அனைவருக்குமான ஆட்சிதான் தி.மு.க. ஆட்சி என்று எடுத்துச் சொன்ன செங்கல்பட்டைச் சேர்ந்த அக்ஷயா - தன்னுடைய கதையையே மேடையில் சொல்லி, எப்படி தன்னுடைய தந்தையின் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கு கலைஞர் காப்பீட்டுத் திட்டம் உதவியது, அவர்கள் குடும்பத்திற்கு வெளிச்சமாக இருந்தது என்று பேசிய செங்கல்பட்டைச் சேர்ந்த கீர்த்தனா போன்றவர்கள் என்னுடைய கவனத்தை ஈர்த்தார்கள்!

### அவதூறு பரப்பியவர்களுக்கு பதிலடி கொடுத்துள்ளனர்!

அதேபோலதான், நாமக்கல்லைச் சேர்ந்த சுதர்சனா என்ற மாணவி, "ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம் எனில், அவன் உயர்சாதிக்கு மட்டும் தங்கத்தால் மூளைசெய்து தலைக்குள் வைத்தானா? மற்ற சாதிக்கெல்லாம் மண்டைக்குள் இருப்பதென்ன களிமண்ணா? சுண்ணாம்பா?" என்ற கலைஞர் வரிகளைச் சொல்லி, ஒடுக்கப்பட்ட மக்கள் படிக்க தலைகுனிந்ததால்தான், இன்றைக்கு அவர்கள் எல்லாம் தலைநிமிர்ந்து நிற்கிறார்கள் என்று, அவதூறு பரப்புகிறவர்களுக்கு எல்லாம் பதிலடி கொடுத்தார். கேட்டபோது, அவ்வளவு மகிழ்ச்சி அடைந்தேன். இதுதான் கலைஞர் ஸ்டைல் பதிலடி! திராவிட இயக்கம் மக்களின் இதயங்களில் வாழ்கிறது என்று எடுத்துக்காட்டிய உருக்கமான பேச்சு அது!

இப்படித்தான் மக்களின் மனதைத் தொடுவது போன்று பேச வேண்டும்! சொல்ல நினைக்கும் கருத்துகளை, தெளிவாக - இனிமையாக - புரியும்படிப் பேச வேண்டும்! சொல் புதிது - சுவை புதிது - தகவல் புதிது - சொல்லும் பாணி புதிது என்று பாராட்டுவது போன்று உங்களின் பேச்சுகள் அமைய வேண்டும்! நவீன யுகத்தின் புதிய பேச்சுப் போராளிகளான உங்களை, வருக... வருக என்று வரவேற்கிறேன்.

திராவிட இயக்கம் இளைஞர்களால் - இளைஞர்களுக்காகத் தொடங்கப்பட்ட இளைஞர் இயக்கம்! இங்கு கொள்கை வீரர்களாக வாருங்கள்... கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு - என்று பேரறிஞர் அண்ணா சொன்னதை நெஞ்சில் தாங்கிக் கருத்துகளைச் சொல்லுங்கள் - கலைஞர் சொன்ன ஐம்பெரும் முழக்கங்களைக் கடைக்கோடிக்கும் எடுத்துச் செல்லுங்கள்! நாம் எல்லோரும் உடன்பிறப்புகள் என்ற பாச உணர்வோடு - தமிழ்நாட்டைத் தொடர்ந்து தலைநிமிரச் செய்வோம்!

இவ்வாறு கழகத் தலைவர் முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.



தென்காசி மாவட்டத்தில் சட்டப்பேரவை பொது நிறுவனங்கள் குழு (2024–2025) தலைவர் ஏ.பி.நந்தகுமார் தலைமையில் தேன்பொத்தை நியாயவிலை கடையில் உணவு பொருட்களின் தரம் மற்றும் தென்காசி நகராட்சியில் ரூபாய் 5.32 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் தினசரி காய்கறி மார்க்கெட் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல்கிஷோர், முதன்மை செயலாளர் சீனிவாசன், குழு உறுப்பினர்கள் அசோகன் (சிவகாசி) ஆனந்தன் (பல்லடம்) ஈஸ்வரன் (திருச்செங்கோடு) ராதாகிருஷ்ணன் (உடுமலைப்பேட்டை) கடம்பூர் ராஜ் (கோவில்பட்டி) கோவிந்தசாமி (பாப்பிரெட்டிபட்டி) துரை.சந்திரசேகரன் (திருவையாறு) பிரகாஷ் (ஓசூர்) வேலு (மயிலாப்பூர்) ஜவாஹிருல்லா(பாபநாசம்)கிரி (செங்கம்) தென்காசி நகர்மன்ற தலைவர் சாதிர் உள்பட அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் மருதுபாண்டியர் அவர்களின் 223 ஆவது ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் முன்னாள் எம்.பி. மாநில மகளிர் அணி இணைச் செயலாளர் திருமதி பவானி ராஜேந்திரன் தலைமையில் தி.மு.க.வினர் மலரஞ்சலி செலுத்தினர்.